றிய ஆணையர் மூலமாக இதுபோன்ற தவறுகளுக்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் மீதும் மற்றவர்கள் மீதும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரிலே கட்டப்பட்ட வீடுகள் ஜெயந்தி ஸ்கீமிலே கட்டப்பட்ட வீடுகள்தான் என்பதைத் தெரிவித்துக் கொண்டு கட்டயத்தேவன் பட்டியில் வீடுகளை மறுபடியும் கட்டமுடியாது, காரணம் பூமி பிளந்து இருக்கிறது, களிமண் இருக்கிறது, அந்த இடத்திலே மேற்கொண்டு கட்டினால் இடிந்துவிழக்கூடிய நிலை தான் ஏற்படும். ஆகவே வேறு ஒரு இடத்தை ஆர்ஜிதம் செய்து கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அரசு இதுகுறித்து விரிவான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாநிலம் பூராவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரிசனங்களுக்காக கட்டப் பட்ட வீடுகள் பழுதடைந்திருப்பவைகளைப் பழுதுபார்ப் பதற்காக துறையின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு வட்டாரத்தின் அளவிலும் வீடுகளை கட்டுவதற்கு வட்டியில்லாக் கடன்களைக் கொடுப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்த மாதிரி கடன்களை அவர்கள் இப்போது பெறமுடியவில்லை. கடன்கள் தரமுடியாது, இனாமாகக் கட்டிக் கொடுத்த வீடுகளுக்கு அவை களை ரிப்பேர் செய்ய பழுதுபார்க்க இடிந்தால் கட்ட கடன் கொடுக்க விதிகள் திருத்தப்படுமா என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு).—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்

அ. சென்னையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடாமல் இருத்தல்

திரு. என். எஸ். வி. சித்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், சென்னை நகரத்திலே இன்று காலையிலிருந்து ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடவில்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி நீங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானமாகக் கொண்டுவரலாம், பாயின்ட் ஆப் ஆர்டரிலே கொண்டுவர முடியாது.